பக்கங்கள்: 08
# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 25 வெள்ளிக்கிழமை 09.07.2021 கதிர் 112

## கொரோனா பரவலால் ஒரு கிராமம் முடக்கம்!

களுத்துறை மாவட்டத்தில் ஒரு கிராமம் இன்று அதிகாலை 6 மணி முதல் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுப் பரவலால் அகலவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கதலந்தல தெற்கு கிராம சேவகர் பிரிவின்

☞2

# தயாசிறியின் கோட்டையில் சபையை இழந்தது 'மொட்டு'



### பஸில் பதவியேற்ற நாளில் அதிர்ச்சி வைத்தியம்; இரகசிய வாக்கெடுப்பில் மலர்ந்தது சு.க. ஆட்சி



பண்டுவஸ்நுவர பிரதேச சபைக்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியால் முன்மொழியப்பட்ட தவிசாளர் தோற்கடிக்கப்பட்டு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் பிரேரிக்கப்பட்ட வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார்.

மேற்படி பிரதேச சபைக்கு புதிய தவிசாளரைத் தெரிவுசெய்வதற்கான கூட்டத் தொடர் நேற்று நடைபெற்றது. இதன்போது இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வேட்பாளருக்கு 16 வாக்குகளும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளருக்கு 20 வாக்குகளும் கிடைக்கப் பெற்றன.

☞2

## பஸிலிடம் நேற்றுக் கையளிக்கப்பட்ட 3 நிறுவனங்கள் மீளவும் மஹிந்தவிடம்

கொழும்பு, ஜூலை 09

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு நேற்று வழங்கப்பட்டிருந்த அரச நிறுவனங்களில், மூன்று நிறுவனங்கள் மீண்டும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வசம் கொண்டுவரப்பட்டுள்ளன. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இன்று வெளியானது.

இதன்படி புத்த சாசன நிதியம், மத்திய கலாசார நிதியம் உட்பட மூன்று நிறுவனங்களே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வகிக்கும் பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

மேற்படி மூன்று நிதியங்களும் நேற்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் நிதி அமைச்சின்கீழ் கொண்டுவரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ராஜபக்ஷ அரசுக்கு எதிராக யாழில் நாளை போராட்டம்

### புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி அழைப்பு




(இ.கலையமுதன்)

ராஜபக்ஷ அரசுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் நாளை கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது எனப் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் தலைவர் சி.க.செந்தில்வேல் தெரிவித்தார்

யாழ்ப்பாணத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது நாட்டில் உள்ள அரசியல் நிலைமையானது மக்களுக்கு விரோதமான செயற்பாடாகவும் மக்களுக்கு எதிரான செயலாகவும் காணப்படுகின்றதை

☞2

## கற்குவாரியிலிருந்து விழுந்து இளைஞர்கள் இருவர் மரணம்

நவகமுவ வேக்கவத்த பிரதேசத்தில்கற்குவாரியொன்றிலிருந்துவிழுந்து இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று இடம்பெற்றுள்ளது.

கற்குவாரிக்கு வெடி வைத்து விட்டு ஓடும்போதே குறித்த இருவரும் காலிடறி கீழே விழுந்து உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

### தரம் 5 புலமைப்பரிசில், ஜி.சீ.ஈ. உயர்தரம்

## பரீட்சைகளுக்கான திகதிகள் அறிவிப்பு

2021ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை ஆகியன நடைபெறும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி நடைபெறும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஒக்டோபர் 4ஆம் திகதி

☞2

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 266 பேர் கைது!

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 266 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுவரை தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 48 ஆயிரத்து 808 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

## யாழ். நகரில் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட பஸிலின் ஆதரவாளர்கள்



(இ.கலையமுதன்)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ நிதி அமைச்சராகப் பதவியேற்றுள்ள நிலையில், அதையொட்டி யாழ்ப்பாணத்தில் பொதுஜன முன்னணியினர் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

கட்சியின் ஆதரவாளர்கள் யாழ். நகரில் வெடி கொளுத்தியும், வீதியில்செல்வோருக்கு இனிப்புகளை வழங்கியும் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

பொதுஜன முன்னணியின்

☞2

## வவுனியாவில் கத்திக்குத்து; குடும்பஸ்தர் ஒருவர் காயம்

### அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்ப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் இடம்பெற்ற கத்திக் குத்துச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அவர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்றிரவு வவுனியா - பெரியார்குளம் பகுதியில் இடம் பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்த நபர், மகாறம்பைக்குளம் பகுதியில் இருந்து பெரியார்குளம் நோக்கி ஓட்டோவைச் செலுத்திச் சென்றிருந்தார். இதன்போது பெரியார்குளம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் குறித்த சாரதியை கத்தியால் கடுமையாகத் தாக்கியுள்ளார்.

இதனால் படுகாயமடைந்த அவரை அங்கிருந்தவர்கள் உடனடியாக வவுனியா மாவட்ட பொது

☞2

## தயாசிறியின் கோட்டை....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

பண்டுவஸ்நுவர பிரதேச சபையில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் 18 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் 11 பேரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் 7 பேரும், ஜே.வி.பியின் சார்பில் ஒருவரும் அங்கம் வகிக்கின்றனர்.

குருநாகல் மாவட்டத்தில் பண்டுவஸ்நுவர தேர்தல் தொகுதியானது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவின் அரசியல் கோட்டையாகும். அந்தத் தொகுதியிலேயே அவரின் வாக்கு வங்கி தங்கியுள்ளது. சபையிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அவரின் சகாக்களாவர்.

'மொட்டு' கட்சியிலுள்ளவர்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் சகாக்களாவர்.

தயாசிறி ஜயசேகரவை 'மொட்டு' கட்சி உறுப்பினர்கள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். இந்நிலையில், அவரின் கோட்டையில் 'மொட்டு' கட்சி மண்கவ்வியமை அரசியல் பின்னடையாகவே பார்க்கப்படுகின்றது. அதுவும் பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றம் வந்த நாளில் – அவர் அமைச்சராகப் பதவியேற்ற தினத்தில் இவ்வாறு இடம்பெற்றுள்ளமை 'மொட்டு' கட்சி ஆதரவாளர்களை சினம் கொள்ள வைத்துள்ளது என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றன.

## கொரோனா.........

(முதலாம் பக்க தொடர்ச்சி)

பிம்புருவத்த பகுதியே தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

இதேவேளை, இரண்டு மாவட்டங்களைச் சேர்ந்த சில கிராம சேவகர் பிரிவுகள் இன்று அதிகாலை 6 மணி முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி கேகாலை மாவட்டத்தில் மாவனல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹிங்குல்ஓய, மாவட்ட ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும், மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் மேற்கு, தலைமன்னார் கிழக்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் விடுவிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ். நகரில் ....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

யாழ். மாவட்ட அமைப்பாளர் தம்பித்துரை ரஜீவின் ஏற்பாட்டில் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்னால் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி வைக்கப்பட்டன.

கட்சியின் ஆதரவாளர்களும், கட்சியின் பிரதேச செயற்பாட்டாளர்களும் அதில் கலந்துகொண்டனர்.

## வவுனியாவில் கத்தி....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

வைத்தியசாலையில் சேர்த்தனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்ட நிலையில், தாக்குதலை மேற்கொண்டார் எனச் சந்தேகிக்கப்படும் நபரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை வவுனியா குற்றத் தடுப்புப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## பரீட்சைகளுக்கான ....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

முதல் 31ஆம் திகதி வரையில் நடைபெறும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

வழமையாக ஓகஸ்ட் மாதத்தில் நடைபெறும் இந்தப் பரீட்சைகள் கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக ஒக்டோபர் வரையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

## ராஜபக்ஷ அரசுக்கு....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஒன்றரை வருடங்களுக்கு முன்பு புதிய ஜனாதிபதி ஆட்சிக்கு வந்தபோது மிகப்பெரிய லட்சக்கணக்கான வாக்குகளைப் பெற்று ஜனாதிபதி ஆகிவிட்டேன் என்று பெருமிதம் கொள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்து வந்த நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைத் தாங்கள் பெற்று விட்டோம், மக்களுடைய ஆதரவை முழுமையாகப் பெற்று விட்டோம் எனச் சொன்னார்கள்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் சில கட்சிகளை வளைத்துப் போட்டுக்கொண்டு 20ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இந்த நாட்டிலே ஒரு தனிநபர் சர்வாதிகாரமாக – தனிக் கட்சியினுடைய சர்வாதிகாரமாக – ஒரு குடும்பத்தினுடைய சர்வாதிகாரமாக அரசியலை மேற்கொண்டு வருகின்றார்கள்.

எனினும், இந்த நாட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பிரதமராக, ஜனாதிபதியாக, அமைச்சர்களாகக் காணப்படுகின்றார்கள்.

தற்போது நாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப்படுகின்றன. அத்தியாவசியப் பொருள்கள், எரிபொருள்கள் பொதுமக்கள் கொள்வனவு செய்ய முடியாத அளவுக்கு விலையேற்றம் காணப்படுகின்றது.

இன்று ஒரு கிலோ அரிசியினுடைய விலை 150 ரூபாவாகக் காணப்படுகின்றது. சீனி ஒரு கிலோ 130 ரூபாவாகக் காணப்படுகின்றது. எங்கள் நாட்டினுடைய உணவுத் தேவையின் தானிய வகைகளின் விலைகளும் உயர்வடைந்து காணப்படுகின்றன.

தற்போது கொரோனா என்ற திரை மறைவில் நமது நாடு விற்கப்படுகின்றது. கடல், தரை என்பன மறைமுகமாக இந்த அரசால் அந்நிய நாடுகளுக்கு விற்கப்படுகின்றது.

இந்த அரசின் இவ்வாறான செயற்பாடுகளைத் தொடர்ச்சியாகப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி என்பது பொதுமக்களின் நலன் சார்ந்து செயற்படுகின்ற கட்சியாகக் காணப்படுகின்றது.

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வால் சாதாரண உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். வல்லரசுகளின் ஆதிக்கம் இலங்கையில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

எனவே, பொதுமக்களோடு இணைந்து புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியானது அரசுக்கு எதிராகக் குரல் கொடுக்கவுள்ளது. நாளை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொதுமக்களுடன் இணைந்து அரசுக்கு எதிராகப் போராடவுள்ளோம் – என்றார்.

# ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுத்தால் கைதுகள் தொடர்ந்தும் நடக்கும்

## எச்சரிக்கிறார் சரத் வீரசேகர



எதிர்காலத்திலும் எவரேனும் போராட்டங்களை மேற்கொண்டாலும், பொலிஸார் அவர்களைக் கைது செய்து, நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவார்கள் என அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இன்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி நாடாளுமன்ற அமர்வில் அமைச்சர் சரத் வீரசேகர மேலும் கூறியுள்ளவை வருமாறு –

தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் போராட்டங்களை நடத்த நாட்டில் தற்போதைய சூழ்நிலையில் தடை செய்யப்பட்டுள்ளது. சுகாதார அதிகாரிகளாலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதே ஒளிய பொலிஸாரால் அல்ல.

கொரோனாப் பரவல் அச்சுறுத்தல் காரணத்தால் தான், தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு இணங்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் பொலிஸார் தங்களின் கடமையையே மேற்கொண்டார்கள். எதிர்காலத்திலும் எவரேனும் போராட்டங்களை மேற்கொண்டால், பொலிஸார் அவர்களைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவார்கள்.

இதில் நாம் எப்போதும் சமரசங்களை செய்துகொள்ளப்போவதில்லை. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 07 . 1938



இறப்பு 09 . 07 . 2021

## லீலா மாலினி பசநாயக்க

லீலா மாலினி பசநாயக்க சுன்லீன் பாலர் பாடசாலைகள், கண்டியையச் சேர்ந்தவரும் நல்லூர் பரி. யாக்கோபு ஆலயக்குரு மனையில் வண பிதா R.H.R ஹூல் குடும்பத்துடன் 1958ஆம் ஆண்டிலிருந்து வாழ்ந்தவரும் பின்பு பேரா. போல் ஹூலுடனும் வசித்தவருமாவார். 2.7.1938 இல் பிறந்த அவர் 7.7.2021 அன்று காலமானார். அவரது அடக்க ஆராதனை 9.7.2021 இல் கல்கிசை மயானத்தில் (அங்லிகன் பிரிவு) மு.ப. 11:30க்கு நடைபெற்றது.

தொ.இல. 021 222 0191

தகவல்
கலாநிதி ராஜன் ஹூல்,
நல்லூர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

நீர்வேலி கந்தசுவாமி கோவிலடி,
சமூகசேவகி, சமூகபந்து, நீர்வைக்குரிசில், உயர்ந்த பெண்மணி



அமரர்

## ருக்குமணி ஆனந்தவேல்

(ஓய்வு நிலைக் கூட்டுறவுப் பரிசோதகர்)

நல்லையா இராசாங்கம் நலமுடனே பெற்ற நங்கை!
ஆனந்தவேல் தன்னை நாயகனாய் அணைத்த மங்கை!
கூட்டுறவுத் துறைக்கே ஒளிவிளக்காய் அமைந்தாயம்மா!
நாட்டின் உயர்வுக்காய் நலம்பல செய்து நின்றாய்!
கந்தன் ஆலயம் கணிப்புற வழிநடத்தி நின்றாய்!
மாதர்க்கு மல்லிகையாய் மணம் பரப்பி நின்றாயம்மா!
மாதர் சங்கங்கள் மதிப்பொடு வளர்த்தாயம்மா!
நீர்வைக் கிராமம் நிறைவுறச் சேவை செய்தாயம்மா!
எல்லோர்க்கும் தேவியாய் ஏற்றமுற நின்றாயே.
உயர்பட்டங்கள் உன்னையே நாடி வந்தன.
பிரதமை திதியதனில் பிரிந்தாயே எம்மை விட்டு
மண்ணுலக வாழ்வை விட்டு விண்ணகம் சென்றிட்டாயே!
ஆண்டொன்று போனாலும் மறக்குமோ எங்கள் நெஞ்சம்.
ஆன்மா சாந்திக்காய் ஆண்டவனைத் துதிக்கின்றோம்.
அடைக சாந்தி
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 13.08.1944 மறைவு 21.06.2020

கந்தசுவாமி கோவிலடி,
நீரவேலி தெற்கு, நீரவேலி.

உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பஸிலின் திட்டம்தான் என்ன?

**ஆட்சி அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் ராஜபக்ஷ குடும்பத்தில் இளைய சகோதரரான பஸில் ராஜபக்ஷ பின்கதவால் எம்.பியாகி, நாட்டின் நிதியமைச்சராக நேற்று பதவியேற்றபோது, நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் மாற்றம் நிகழப் போகின்றது, நைந்து போன அரசின் நிதி நிலைமை தேறும் என்றெல்லாம் பலரும் எதிர்வு கூறினர். அதிலும் விட கதை விட்டனர் என்று குறிப்பிட்டால் பொருத்தமாக இருக்கலாம்.**

**ஒன்றை மறந்து விடக் கூடாது. அரசியல் ஜாம்பவான் ஒருவரிடமிருந்துதான் நிதி அமைச்சை (பிடுங்கி) எடுத்துக் கொள்கின்றார் பஸில் ராஜபக்ஷ.**

**நிதி அமைச்சை இதுவரை வைத்திருந்து, அதனை தமது இளைய சகோதரருக்காக விட்டுக் கொடுத்தவர் இந்த நாட்டின் ஜனாதிபதியும் நிதி அமைச்சராகவும் இருந்த தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷதான். ஆகவே மஹிந்த ராஜபக்ஷவை விட புதிய சாதனைகளை, தந்திரோபாயங்களை, முறைமைகளை அவர் நடைமுறைப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை ஒரேயடியாக மேம்படுத்தி விடுவார் எனக் கனவு காண்பது அர்த்தமற்றது.**

**பொருளாதாரத் துறையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய திறமைசாலி, சாணக்கியர், தந்திரசாலி என்று பஸில் மீது பொதுவான நம்பிக்கை உண்மையில் இருக்குமானால், அவர் நிதியமைச்சராகப் பதவியேற்றவுடனேயே வர்த்தக சமூகத்திலிருந்து அந்தப் பிரதிபலிப்பு வெளிப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அப்படி எதுவுமே நேரவில்லை. மாற்றம் – வித்தியாசம் – தெரியவில்லை.**

**கொழும்பு பங்குச் சந்தையில் பெரிய மாற்றம் ஏதும் நிகழவில்லை. சரிவு நிலை – மந்தப் போக்கு – தொடரவே செய்தது.**

**அனைத்துப் பங்கு விலைக் குறியீட்டுச் சுட்டி ஆக இரண்டே இரண்டு புள்ளிகள்தான் அதிகரித்தது. கொழும்பு பங்குச் சந்தையில் மொத்தப் புரள்வும் மிகச் சாதாரண நிலையிலேயே இருந்தது.**

**பஸில் ராஜபக்ஷ புதிய நிதியமைச்சராகப் பதவி ஏற்கின்றார் என்றதும் பல தனியார் நிறுவனங்களின் 'தலைகள்' அதனை பெரிய விடயமாக ஊதிப் பெருப்பித்துக் கருத்துக்களை முன்வைத்தன என்பது போல ஒரு தோற்றப்பாடு காட்டப்பட்டது. அதனால் கொழும்பு பங்குச் சந்தையில் பெரிய பிரதிபலிப்பு இருக்கும் என்றும் நம்பப்பட்டது. ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை.**

**இதுதான் உண்மை நிலைவரம்.**

**ஒரு நடிகரை மாற்றுவதன் மூலம் நாடகம் களை கட்டி விடும் என்று நம்புவது அர்த்தமற்றது. அபஸ்வரம் பாடும் மையக் கருத்தை வைத்துக் கொண்டு எந்த நாடகத்தை, யார் நடித்தாலும் வெற்றிகரமாக ஒப்பேற்ற முடியாது என்பதுதான் நிலைமை.**

**'(பங்கு) சந்தைக்கு அது சுவாசிக்க பிராண வாயுவும் இல்லை. சக்தியும் (வலுவும்) இல்லை. அவையே தேவைப்படுகின்றன. நிர்வாகி மாற்றம் அல்ல." என்கின்றார் பங்குச் சந்தை முதலீட்டாளர் ஒருவர்.**

**வங்கித் துறையின் சில கொடுக்கல் – வாங்கல்கள், பங்கு வர்த்தகங்களால் பங்குச் சந்தை நிரந்தரமாகப் படுத்து விடாமல் ஓடிக் கொண்டிருக்கின்றது. அவ்வளவுதான்.**

**எது, எப்படி என்றாலும் நிதி அமைச்சராகத் தாம் பொறுப்பேற்றமை தொடர்பில் வித்தியாசத்தைக் காட்டுவதற்காக ஏதேனும் குயுக்தித்தனம் பண்ணாமல் பஸில் ராஜபக்ஷ விடப் போவதில்லை.**

**ஏதேனும் விதிமுறைகள், கட்டுப்பாடுகள், நெருக்குவாரம் தரும் ஒழுங்குமுறைகளை அவர் அறிமுகப்படுத்தக் கூடும்.**

**பதவியேற்ற கையோடு அவர் முன்வைத்த கருத்து இதனைக் கோடிகாட்டத் தவறவில்லை.**

**"ஒரு தந்தையைப் போல விரும்பத்தகாத முடிவுகளை எடுக்க வேண்டிய நிலைமையும் வரும்" என்று அவர் முன்னெச்சரிக்கை அறிவித்தல் விடுத்தமை அத்தகைய எண்ணத்தைத்தான் தந்து நிற்கின்றது.**

**நாட்டின் பொருளாதாரம், இப் பகுதியில் ஏற்கனவே நாம் பல தடவைகள் குறிப்பிட்ட மாதிரி அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்றது. அந்நிய செலாவணிக் கையிருப்பு கரைந்து விட்டது. ரூபாவின் பெறுமதி நாளொரு வீச்சாக வீழ்ந்து வருகின்றது. ஏற்றுமதிகளும் குறைந்து விட்டன. வெளிநாட்டுக் கடன்களுக்கான தவணைப் பணத்தைக் கட்டுவதற்குக் கூட புதிய கடன்களைப் பெற முடியாத நிலைமை.**

**போதாக்குறைக்கு சர்வதேச உறவாடல் கையாள்கையின் தவறுகளால் மேற்குல உதவிகளும் கிட்டாத நிலைமை. காலங்காலமாக இலங்கைக்கு உதவி வந்த ஜப்பான் கூட தனது உதவித் திட்டங்களை அடியோடு குறைத்து விட்டது.**

**நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கு புதிய நிதி அமைச்சர் என்ன தந்திரம் செய்யப் போகின்றார்?**

## ஜனநாயக ரீதியாகப் போராடும் தரப்பை ஒடுக்கும் வகையில் செயற்படுகிறது அரசு

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் காட்டம்



அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக ஜனநாயக ரீதியாக போராடும் தரப்பை ஒடுக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் ஊடக சுதந்திரத்தை இல்லாது செய்ய முயற்சிப்பதாகத் தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தியினரால் நேற்று (வியாழக்கிழமை) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

'அரசமைப்பை பாதுகாத்து மனித உரிமையை பாதுகாக்கும் உரிமை அனைத்து மக்களுக்கும் உள்ளது.

இதனை இல்லாது செய்வதை நாம் பார்த்துக்கொண்டிருக்க மாட்டோம். இன்று மக்களின் வாழ்வாதாரம் உயர்வடைந்துள்ளது.

விவசாயிகளுக்கு உரம் இல்லாது போயுள்ளது. பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் இல்லாதுபோயுள்ளது. கடல் உள்ளிட்ட சுற்றாடல் வளம் அழிவடைந்துள்ளது. மாணவர்களின் கல்வி முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் மந்தகதியில் இடம்பெறுகின்றன. இவையனைத்துக்கும் தீர்வொன்றை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியே மக்கள் போராடுகிறார்கள்.

இதனை மேற்கொள்ளாமல், அரசாங்கம் மக்கள் மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றமை வெட்கத்துக்குரியதாகும்.

அச்சுறுத்தல்களை விடுத்தோ சுற்றுநிரூபங்களை வெளியிட்டோ மக்களின் குரல்களை நசுக்கிவிட முடியாது என்பதை அரசாங்கம் நினைத்துக்கொள்ள வேண்டும்.

நாம் எதிர்க்கட்சியாக இருந்துகொண்டு எதிர்ப்பை மட்டும் வெளியிட்டுக்கொண்டிருக்காமல், கொரோனா ஒழிப்பு செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராகவே இருக்கிறோம்' என அவர் மேலும் தெரிவித்தார்.

## தனியார்துறை பணியாளர்களின் ஆகக் குறைந்த சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பாக சட்டமூலம்



இந்நாட்டின் தனியார் துறை பணியாளர்களுக்கான ஆகக்குறைந்த சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள சட்டமூலம் தொழில் அமைச்சர் நிமல் சிறிபால.டி.சில்வா தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற தொழிலமைச்சர் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டது.

இலங்கை நாடாளுமன்ற பணிப்பாளரால் (தொடர்பாடல்) வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்பொழுது காணப்படும் ஆகக் குறைந்த சம்பளத் தொகையான 10 ஆயிரம் ரூபாவை 12 ஆயிரத்து 500 ரூபாவாகவும், ஆகக் குறைந்த நாள் சம்பளத் தொகையான 400 ரூபாவை 500 ரூபாவாக அதிகரிப்பதற்கும் 2016ஆம் ஆண்டு 03ஆம் இலக்க வேலையாள்களின் குறைந்தபட்சவேதனச்சட்டத்தின் 03 ஆவது சரத்தை திருத்துவதாக இது அமையும்.

இந்தச் சட்டமூலம் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் ஊடாக விதிக்கப்பட்ட எந்தவொரு தடைக்கோ அல்லது கட்டுப்பாடுகளுக்கோ உட்படாது என்றும், அரசமைப்புக்கு உட் பட்டது என்றும் சட்டமா அதிபர் சட்டரீதியான சான்றிதழ் வழங்கியிருக்கிறார் எனவும், இதற்கமைய குறித்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிப்பது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் 2017 ஆம் ஆண்டுக்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் 2018 ஆம் ஆண்டுக்கான தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனத்தின் ஆண்டு அறிக்கை ஆகியவையும் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜகத் புஷ்பகுமார, ரஜிகா விக்ரமசிங்ஹ, கோகிலா ஹர்ஷினி குணவர்த்தன ஆகியோரும், தொழில் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## சசீந்திர ராஜபக்ஷ மற்றும் மொஹான் டி சில்வா ஆகியோரின் இராஜாங்க அமைச்சுகளில் திருத்தம்

சேதனப் பசளை உற்பத்தி ஊக்குவிப்பு, விநியோக ஒழுங்குப்படுத்தல், நெல் மற்றும் தானியங்கள், சேதன உணவு, மரக்கறி, பழங்கள், மிளகாய், வெங்காயம், உருளைக் கிழங்கு உற்பத்தி ஊக்குவிப்பு, விதை உற்பத்தி மற்றும் உயர்தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சராக சசீந்திர ராஜபக்ஷ சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதேநேரம், கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக மொஹான் டி சில்வா சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னிலையில் இவர்கள் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளனர்.

## மன்னாரில் உலர்ந்த மஞ்சள் மூடைகளுடன் வள்ளங்கள் மற்றும் வாகனம் என்பன மீட்பு

### சந்தேக நபர்கள் தப்பியோட்டம்



சட்ட விரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட ஒரு தொகுதி உலர்ந்த மஞ்சள் மூடைகளை நேற்று (வியாழக்கிழமை) மன்னார் பெரியகடை கடற்கரை கலப்பு பகுதியில் வைத்து இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.

மன்னார் இராணுவப் புலனாய்வு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விரைந்து செயல்பட்ட இராணுவத்தினர் மன்னார் பெரியகடை கடற்கரை கலப்புப் பகுதியில் வைத்து 18 மூடைகளில் பொதி செய்யப்பட்ட 672 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் மூடைகளை கைப்பற்றியுள்ளனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய வள்ளங்கள் 3 மற்றும் பட்டா ரக வாகனமும் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# ஆப்கானில் அமெரிக்க இராணுவ நடவடிக்கை ஓகஸ்ட் 31 உடன் முடிவுக்கு வரவுள்ளது

தோஹாவில் சமீபத்தில் நடைபெற்ற பேச்சில் தலிபான்களுக்கும், அமெரிக்காவுக்கும் உடன் பாடு ஏற்பட்டது. ஆப்கான் அரசுடன் தலிபான்கள் பேச்சில் ஈடுபட வேண்டும், ஆப்கானிலிருந்து வெளியேறும் அமெரிக்கப் படை மீது தாக்குதல் நடத்தக் கூடாது என்பன உள்ளிட்ட முடிவுகள் எட்டப்பட்டன. இந்நிலையில், அமெரிக்கப் படை திரும் பப் பெறப்படும் என அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து வெள்ளை மாளிகையில் ஜோ பைடன் கூறியதாவது:

ஆப்கானில் தேசத்தைக் கட்டமைக்கும் பணிக்காக அமெரிக்க இராணுவம் அங்கு செல்லவில்லை. அந்த நாட்டின் எதிர்காலத்தை மேம்படுத்த ஆப்கான் தலைவர்கள் ஒன்றிணைந்து முயற்சிகளை எடுக்கவேண்டும். மேலும், ஆயிரக்கணக்கான அமெரிக்கர்களை ஆபத்தில் சிக்கவைக்க அமெரிக்கா விரும்பவில்லை.

தலிபான்களை நம்பவில்லை என்ற போதும், ஆப்கான் அரசை காக்கும் திறன் அந்நாட்டு இராணுவத்துக்கு உள் ளது என்ற நம்பிக்கை உள்ளது. எனவே, ஆப்கானில் அமெரிக்க இராணுவ நட வடிக்கை வரும் ஓகஸ்ட் 31 ஆம் திகதியுடன் முழுமையாக முடிவுக்கு வந்துவிடும் என்றார்.

# தென் ஆபிரிக்காவின் முன்னாள் அதிபர் சரண்!

தென் ஆபிரிக்க நாட்டின் முன்னாள் அதிபர் ஜேக்கப் ஜுமா (வயது 79). இவர் தனது 9 ஆண்டு பதவிக்காலத்தில் நடந்த ஊழல் தொடர்பான விசாரணையில் சாட்சியம் அளிப்பதற்கு மறுத்து விட்டார். இது தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரித்த அந்த நாட்டின் அரசியல் சாசன நீதிமன்று அவருக்கு 15 மாதங்கள் சிறைத்தண்டனை விதித்து கடந்த மாதம் 29 ஆம் திகதி உத்தரவிட்டது. அவர் சரண் அடைவதற்கு நேற்று முன்தினம் நள்ளிரவு வரை கெடு விதிக்கப்பட்டிருந்தது. இது அந்த

இந்த நிலையில் கெடு முடிவடையும் நேரத்தில் அவர் பொலிஸில் சரண் அடைந்ததைத் தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டார். முன்னதாக அவரது மகள் டுது ஜுமா சம்புட்லா டுவிட்டரில் ஒரு பதிவு வெளியிட்டார். அதில் அவர், எனதுதந்தைசிறைக்குச்சென்று கொண்டு இருக்கிறார்.

ஆனா லும் அவர் நல்ல உற்சாகத்துடன் இருக்கிறார் என கூறப்பட்டுள்ளது. ஜேக்கப் ஜுமா அறக்கட்டளை ஒரு அறிக்கை வெளியிட்டது. அதில், ஜுமா சிறைவாச உத்தரவுக்கு இணங்க முடிவு செய்துள்ளார்



நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அவர் சரண் அடையாவிட்டால், கைது செய்யப்படுவார் என பொலிஸ் எச்சரித்தது.

என கூறப்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்க நாட்டில் முன்னாள் அதிபர் ஒருவர் சிறைக்கு சென்றிருப்பது இதுவே முதல் முறை ஆகும்.

## அதிகாிந்து வரும் உணவுப் பொருள்களின் விலையேற்றத்தால்

# உலகம் முழுவதும் கூடுதலாக 40 விழுக்காடு மக்கள் உணவுப் பற்றாக்குறைக்கு ஆளாகி வருகின்றனர்!



அதிகரித்து வரும் உணவுப் பொருள்களின் விலையேற்றம் உலகம் முழுவதும் கூடுதலாக 40 விழுக்காடு மக்கள் உணவுப் பற்றாக்குறைக்கு ஆளாகி இருக்கின்றார் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஐ.நாவின் உலக உணவுத் திட்டத்தின் அறிக்கையில், மக்களுக்கு இடையேயான மோதல், காலநிலை மாற்றம் மற்றும் கொரோனாத் தொற்று காரணமாக உணவுப்பற்றாக்குறையால் 27 கோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என கூறப்பட்டுள்ளது. இவை தவிர சர்வதேச சந்தையில் விற்கப்படும் உணவுப் பொருள்களின் விலை கிட்டத்தட்ட 34 விழுக்காடு உயர்ந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லெபனான் நாட்டில் கோதுமை மாவின் விலை 219 மடங்கும், சமையல் எண்ணையின் விலை 440 மடங்கும் உயர்ந்திருப்பதையும் ஐ.நா. அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# மிதக்கும் கழிவுகளை அகற்ற பிரான்ஸில் ரோபோ அறிமுகம்

பிரான்ஸில் கடலில் மிதக்கும் கழிவுகளை அகற்றும் ரோபோ அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஜெல்லிபிஷ்போட் (Jellyf ishbot) என பெயரிடப்பட்டுள்ள இந்த ரோபோ, கடலில் மிதக்கும் கழிவுகள், குப்பைகளை உள்ளிழுத்து, தனக்குள் இருக்கும் பை போன்ற அமைப்பில் சேகரிக்கிறது. பார்ப்பதற்கு சிறிய படகு போன்று இருக்கும் இந்த ரோபோ முற்றிலும் பேட்டரியால் இயங்கக்கூடியது. காசிஸ் (cassis) நகரிலுள்ள துறை முகத்தில் மிதக்கும் கழிவுப் பொருள்களை ஜெல்லி பிஷ்போட் சுத்தம் செய்துவருகிறது.





# அறுவை சிகிச்சைக்குப்பின் போப் ஆண்டவருக்கு காய்ச்சல்

குடல் பாதிப்புக்காக இத்தாலி தலைநகர் ரோமில் உள்ள கெமல்லி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருந்த போப் ஆண்டவர் பிரான்ஸுக்கு கடந்த 4ஆம் திகதி அறுவைச் சிகிச்சை நடந்தது.

பெருங்குடல் சுருக்கத்தால் அவதிப்பட்ட அவருக்கு, பெருங்குடலின் இடதுபாகம் அறுவை சிகிச்சை செய்து நீக்கப்பட்டது. இந்த அறுவை சிகிச்சைக்குப்பின் வேகமாக அவர் குணமடைந்து வருகிறார். எனினும் அறுவை சிகிச்சை நடந்து 3 நாள்களுக்குப்பின், அதாவது நேற்று முன்தினம் மாலையில் அவருக்கு காய்ச்சல் ஏற்பட்டது. எனவே அவரது உடல் நிலையை டாக்டர்கள் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

அதேநேரம் நேற்றுக் காலையில் அவருக்கு வழக்கமான பரிசோதனைகளுடன், மார்பு மற்றும் வயிற்றுப்பகுதியில் ஸ்கேன் எடுக்கப்பட்டது. இதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என கண்டறியப்பட்டு உள்ளது.

போப் பிரான்ஸால் சாப்பிடவும், துணையின்றி நடக்கவும் முடிவதாகவும் வாடிகன் கூறியுள்ளது. ஆஸ்பத்திரியில் அவ்வப்போது நடைபயிற்சியில் ஈடுபட்டுள்ள அவர், அங்குள்ள இளம் புற்றுநோயாளிகளுக்கு வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டார் எனவும் வாடிகன் செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.

போப் பிரான்சிஸ் விரைவில் உடல் நலம் பெற்று திரும்புவதற்காக உலகம் முழுவதும் உள்ள தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

# இந்திய அரசின் 20 சொத்துக்கள் முடக்கம்

## கெய்ர்ன் நிறுவன வழக்கில் பிரான்ஸ் நீதிமன்றம் தீர்ப்பு




கெய்ர்ன் பி.எல்.சி. நிறுவனத்துக்கு ஆதரவாக சர்வதேச தீர்ப்பாயம் அளித்த தீர்ப்பின் படி, 172 கோடி டொலர் வரி நிலுவையை வசூலிக்கும் முயற்சியாக பிரான்ஸ் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் இந்திய அரசுக்குச் சொந்தமான 20 சொத்துக்களை முடக்க நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

பாரிஸில் மத்தியப் பகுதியில் அமைந்துள்ள இந்திய அரசின் குடியிருப்புகள் 2 கோடி யூரோ மதிப்புடையவை. இவை பிரான்ஸில் இந்திய அரசின் பயன்பாட்டுக்காக உள்ளன. இவை முடக்கப்பட்டுள்ளன என ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்திகதியிட்ட வரி விதித்தது தொடர்பாக தீர்ப்பாயம் அளித்த தீர்ப்பை நடைமுறைப்படுத்த, இந்திய அரசின் சொத்துக்களை முடக்கக் கோரி கடந்த மாதம் 11 ஆம் திகதி கெய்ர்ன் நிறுவனம் பாரிஸில் உள்ள நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. அந்த வழக்கில் நேற்று தீர்ப்பளித்த நீதிமன்றம், இந்திய அரசின் 20 சொத்துக்களை முடக்கி வைக்கலாம் என்றும் அதிலிருந்து கெய்ன் நிறுவனம் தனக்கு வரவேண்டிய தொகையை எடுத்துக்கொள்ளலாம் எனவும் தீர்ப்பளித்துள்ளது.

இது குறித்து இந்திய நிதியமைச்சகம் சார்பில் விடுத்த அறிக்கையில் இதுவரை பிரான்ஸ் நீதிமன்றத்தில் இருந்து எந்த விதமான உத்தரவும் கிடைக்கவில்லை. அந்த உத்தரவு கிடைத்தபின் உரிய சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், கெய்ர்ன் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், இந்த விவகாரத்தை எவ்வாறு முடிப்பது என்பது இந்தியாவின் கையில்தான் இருக்கிறது. இந்திய அரசுடன் சுமூகமாகச் சென்று பிரச்சினையை முடிக்கவே விரும்புகிறோம். இது தொடர்பாக கடந்த பெப்ரவரி மாதத்தில் இருந்தே விரிவான அறிக்கையை அரசுக்கு அனுப்பினோம். உலக பங்குதாரர்களின் நலன்காக்க எமது நிறுவனம் உரிய நடவடிக்கையை எடுக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

1999 ஆம் ஆண்டில் இந்தியாவில் எண்ணெய், எரிவாயு எடுக்கும் பணிக்கான ஒப்பந்தத்தைப் பெற்று ஆரம்பிக்கப்பட்ட கெய்ர்ன் இந்தியா நிறுவனம், 2006-2007 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் தனது 10 சதவீத பங்குகளை தாய் நிறுவனமான கெய்ர்ன் பி.எல்.சி. நிறுவனத்துக்கு மாற்றியது. இதன்படி மூலதனம் மூலம் கிடைத்த ஆதாயத்துக்கு ரூபா.24,500 கோடி தொகையை வரியாக செலுத்த வேண்டும் என இந்திய மத்திய அரசு உத்தரவிட்டது. இது தொடர்பாக இந்திய உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றங்களில் தங்களுக்கு சாதகமாக தீர்ப்பு வராத சூழலில் சர்வதேச மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் கெய்ர்ன் நிறுவனம் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கு கடந்த சில ஆண்டுகளாக நடந்து வந்த நிலையில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் தீர்ப்பளிக்கப்பட்டது.

2007-2008 ஆம் ஆண்டு பங்கு பரிமாற்றம் செய்தபோது விதிக்கப்படாத மூலதன ஆதாய வரித் தொகையை முன்திகதியிட்டு விதிக்க முடியாது என்று சர்வதேச தீர்ப்பாயத்தில் 3 பேரடங்கிய அமர்வு கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் தீர்ப்பினை வழங்கியது. மேலும் வரி நிலுவையை வசூலிக்க இந்திய அரசு எத்தகைய முயற்சியும் மேற்கொள்ளக் கூடாதுஎன்றும்தீர்ப்பில்குறிப்பிடப்பட்டது.

இந்தவழக்குதொடர்பாகஏற்கெனவே அமெரிக்கா, லண்டன், நெதர்லாந்து, கனடா, பிரான்ஸ், சிங்கப்பூர், ஜப்பான், ஐக்கிய அரபு அமீரகம், கேமன் தீவுகளில் உள்ள நீதிமன்றங்களையும் கெய்ர்ன் நாடியிருந்தது. எனவே, இந்திய அரசு நிலுவைத் தொகையை திரும்ப அளிக்காவிடில், இந்த 10 நாடுகளில் உள்ள இந்திய அரசுக்குச் சொந்தமான சொத்துகளை கெய்ர்ன் நிறுவனம் முடக்கலாம் எனவும் சர்வதேச தீர்ப்பாயம் உத்தரவிட்டது. இந்நாடுகளில் உள்ள நீதிமன்றங்களில் சர்வதேச தீர்ப்பாய உத்தரவைச் சுட்டிக்காட்டி கெய்ர்ன் நிறுவனம் மனுத் தாக்கல் செய்தது. அவ்வாறு பாரிஸில் உள்ள நீதிமன்றத்தில் கெய்ர்ன் நீதிமன்றம் தொடர்ந்த வழக்கிலேயே பாரிஸில் உள்ள மத்திய பகுதியில் இருக்கும் இந்திய அரசுக்குச் சொந்தமான 20 சொத்துக்களை முடக்க கெய்ர்ன் நிறுவனத்துக்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. ஆனால், இதுவரை இந்திய அரசுக்குச் சொந்தமான கட்டடங்களில் உள்ள அதிகாரிகளை வெளியேற்றும் எந்த நடவடிக்கையிலும் கெய்ர்ன் நிறுவனம் ஈடுபடவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இந்தியாவில் மேலும் நாற்பத்து மூவாயிரம் பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி



இந்தியாவில் கொரோனாப் பாதிப்பு தொடர்பான விவரங்களை மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்டு வருகிறது. அதன்படி, கடந்த 24 மணிநேரத்தில் இந்தியாவில் 43 ஆயிரத்து 393 பேருக்கு புதிதாக கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால், இந்தியாவில் கொரோனா பரவியவர்களின் மொத்த எண்ணிக்கை 3 கோடியே 7 லட்சத்து 52 ஆயிரத்து 950 ஆக அதிகரித்துள்ளது.

வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் 4 லட்சத்து 58 ஆயிரத்து 727 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். கொரோனாப் பாதிப்பில் இருந்து கடந்த 24 மணிநேரத்தில் 44 ஆயிரத்து 459 பேர் குணமடைந்து இருப்பிடங்களுக்குத்திரும்பியுள்ளனர். இதனால், நாட்டில் கொரோனாவில் இருந்து குணமடைந்தோர் மொத்த எண்ணிக்கை 2 கோடியே 98 லட்சத்து 88 ஆயிரத்து 284 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கடந்த 24 மணிநேரத்தில் கொரோனாத் தாக்கத்தினால் 911 பேர் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து, இந்தியாவில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 5 ஆயி ரத்து 939 ஆக அதிகரித்துள்ளது. இந்தியாவில் இதுவரை செலுத் தப்பட்ட கொரோனாத் தடுப்பூசிகளின் எண்ணிக்கை 36 கோடியே 89 லட்சத்து 91 ஆயிரத்து 222 ஆக அதிகரித்துள்ளது.

நாடு முழுவதும் இதுவரை 42 கோடியே 70 லட்சத்து 16 ஆயிரத்து 605 கொரோனா மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, நேற்று ஒரேநாளில் 17 இலட்சத்து 90 ஆயிரத்து 708 கொரோனா மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோடியைத்தான் முதலில் மாற்ற வேண்டும்!

## காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் கருத்து



திறமைகளின் அடிப்படையில் இந்திய மத்திய அமைச்சரவையில் மாற்றம் என்றால், முதலில் பிரதமர் மோடியையைத்தான் மாற்ற வேண்டும் என்று காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ரந்தீப் சிங் சுர்ஜேவாலா கூறியுள்ளார்.

அமைச்சர்களின் செயல்பாடு, திறமை, அடுத்தடுத்துவரும் மாநிலத் தேர்தல்கள் ஆகியவற்றை மனதில் வைத்து இந்திய மத்திய அமைச்சரவை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இதில் 30 இற்கும் மேற்பட்ட புதுமுகங்கள் கொண்ட 43 பேர் அமைச்சர்கள் பதவி ஏற்றனர். பெண்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு 7 பெண் அமைச்சர்கள் இதுவரை நியமிக் கப்பட்டுள்ளனர். இதுதொடர்பாக காங்கிரஸ்கட்சியின்செய்தித்தொடர்பாளர் ரன்தீப்சிங் சுர் ஜேவாலா டுவிட்டரில், திறமையின் அடிப்படையில் மத்திய அமைச்சரவை மாற்றப்பட வேண்டும் என்றால், முதலில் பிரதமர் மோடியின் நிர்வாகத் தோல்விகளுக்காக அவரைத்தான் நீக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், உள்துறை அமைச்சர் அமித்ஷா, பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகி யோரையும் நீக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.



# வங்கக் கடலில் காற்றழுத்தம் தமிழ் நாட்டில் கனமழை?

சென்னை மாநகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் கடந்த சில மணித்தியாலங்களில் விட்டு விட்டுப் பெய்த கன மழையினால் மரங்கள் முறிந்து வீழ்ந்து போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது. காஞ்சிபுரம் மாவட்டம், தேனி, திண்டுக்கல், திருவள்ளூர், செஞ்சி, போடி, மதுரை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலும் பரவலாக கன மழை பெய்துள்ளது.

இந்த நிலையில், வங்கக் கடலில் புதிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி நாளை மறுநாள் உருவாகவுள்ளது என்றும், இதனால் தமிழ்நாட்டின் ஒரு சில பகுதிகளில் அதிக மழை பெய்யும் எனவும் இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மத்திய மேற்கு - வடமேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதி, தெற்கு ஒடிசா - வடக்கு ஆந்திர பகுதிகளில் ஜூலை 11 ஆம் திகதி இந்தப் புதிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகிறது. இதனால், தெலுங்கானா, ஆந்திரா மற்றும் தமிழகத்தில் வரும் வாரத்தில் கனமழை முதல் மிகக் கனமழைக்கு வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காற்றழுத்தம் புயலாக மாறும் வாய்ப்புகள் இருக்கின்றனவா? என்பதும் எந்தத் திசையை நோக்கி நகரும் என்பது குறித்த விவரங்களும் இதுவரை வழங்கப்படவில்லை. அதே நேரம், தென்மேற்கு மற்றும் அரபிக்கடல் பகுதிகளில் 40 முதல் 50 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வரும் இரண்டு நாள்களுக்கு கோவை, நீலகிரி மற்றும் டெல்டா மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் இந்திய வானிலை ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு




# சகல துறைகளிலும் இராணுவமயமாக்கல்

## நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கருத்து

நாட்டின் சகல துறைகளும் இராணுவமயமாக்கலுக்கு உட்படுத்தப்பட்டு வருவதைப்போல நாட்டின் உயர் கல்வியும் இன்று இராணுவமயமாக்கலுக்கு உள்ளாகியுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'நாட்டின் சகல துறைகளும் இராணுவமயமாக்கலுக்கு உட்படுத்தப்பட்டு வருவதைப்போல நாட்டின் உயர்கல்வியும் இன்று இராணுவமயமாக்கலுக்கு உள்ளாகியுள்ளது.

1970 களில் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் நிலைக்கு தள்ளப்பட காரணம் இந்த கல்வி முறையில் ஏற்பட்ட நிராகரிப்பாகும். 1948 ஆம் ஆண்டில் இருந்து பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும் கூட கல்வித்துறையில் ஏற்பட்ட தலையீடுகள் காரணமாகவே எமது தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் நிலைக்கு தள்ளப்பட்டனர். கல்வி என்பது ஒரு நாட்டின் முக்கியமான துறையாகும். இது சகலரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒன்றாகும். அவ்வாறு இருக்கையில் சகலதுறைகளிலும் இன்று இராணுவமயமாக்கல் இடம்பெற்று வருகின்றது.

கொரோனாக் கட்டுப்பாட்டு நிலைமைகளாக இருந்தாலும், சட்டம் ஒழுங்கு அமைச்சும் இராணுவத்தின் மூலமாகவே நிர்வகிக்கப்படுகின்றது. விவசாயத்திலும் அவர்கள் கை வைத்துள்ளனர். இந்த நிலை இன்று உயர் கல்வியிலும் கை வைக்கும் நிலை உருவாகியுள்ளது.

தேசியப் பாதுகாப்பு குறித்த கொள்கை என்னவென்பது சகலரும் தெரிந்து கொள்ள வேண்டும். இப்போதும் இராணுவ கொள்கைக்கு கீழ் சிவில் மாணவர்களுக்கும் கற்பிக்கவே முயற்சிக்கப்படுகின்றது. இறுதி யுத்தத்தின் பின்னர் இப்போது வரையில் இராணுவத்தினர் எண்ணிக்கை ஒரு லட்சத்தால் அதிகரித்துள்ளது. இவர்களுக்கு கொடுப்பனவுகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன.

இன்றுள்ள நிலையில் இலங்கைக்குள் இன்னொரு யுத்தத்தில் இராணுவம் ஈடுபடவேண்டிய தேவை வராது, எனவே சர்வதேச சவால்களுக்கே இனி நாம் முகங்கொடுக்க வேண்டும். அவ்வாறு என்றால் இராணுவத்தை மட்டும் அல்ல, ஏனைய படைகளையும் பலப்படுத்த வேண்டும். ஆனால் இராணுவத்தை மாத்திரம் பலப்படுத்துவதன் நோக்கம் என்ன. எனவும் தெரிவித்துள்ளார்.

# விவசாயிகள் விடயத்தில் அரசியல் தலையீடு

## கிழக்கு ஆளுநர் குற்றசாட்டு

விவசாயிகளை பிழையாக நடத்துவதற்கு அரசியல் தலையீடு இருக்கின்றது இதனால் தான் விவசாயிகள் இன்று சேதனப் பசளையை வேண்டாம் என்று கூறிக்கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் .

இரசாயனப் பசளையின் பாதிப்பு காரணமாகதான் விவசாயிகள் இன்று வீதிக்கு இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் சேதனப் பசளை தொடர்பாக விவசாயிகள் மத்தியில் அதனுடைய நன்மை தீமை இதுவரைக்கும் சென்றடையவில்லை.

இன்று அரிசியை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது தற்போது விவசாயிகள் கூட இதில் அதிர்ச்சி அடைந்த நிலையில் காணப்படுகின்றனர் என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

இரசாயனப் பசளை மூலமாக விவசாயம் செய்து வந்தவர்கள் புரிந்து கொண்டால் இன்று வெளிநாட்டில் இருந்து அரிசி இறக்குமதி செய்யும் நிலை ஏற்பட்டிருக்காது முதலில் நாங்கள் இதை புரிந்து கொள்ளவேண்டும்.

இரசாயனப் பசளையா அல்லது சேதனப் பசளையா என்பது பிரச்சினை இல்லை, மொத்தமாக எமது நாட்டின் பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தியை எவ்வாறு அடையமுடியும் என்பதை பார்க்க வேண்டும். எமது ஜனாதிபதியின் திட்டம் ஒரு புது திட்டமானது ஆகவே நாங்கள் சிங்களம், தமிழ், முஸ்லிம் என்பதற்கு அப்பால் எங்களுக்கு பொருந்தக்கூடிய பசளை முறையை உருவாக்க வேண்டும்.

எமது நாட்டின் பொருளாதாரத்தை உயர்வடையச் செய்கின்றவர்கள் விவசாயிகள் ஆனால் இன்றைய நாளில் அதிக அளவு நஷ்டத்தில் இருப்பவர்களும் விவசாயிகளாக தான் இருக்கின்றார்கள் இதற்கான காரணம் இராசயன பசளை முறைமையே.

இரசாயனப் பசளை விவசாயிகளுக்கு இனாமாக வழங்கப்பட்டாலும் அவர்களுடைய வாழ்வாதாரம் உயர்வடையவில்லையே, தற்போது சேதனப்பசளை முறைமையை ஆரம்பித்து இருக்கின்றோம் ஆகவே விவசாயிகள் உணர வேண்டும் எமது நாட்டுக்கு சிறந்தது சேதனப் பசளை என்பதை.

இந்த சேதனப் பசளையின் நன்மை தீமை தெரியாதவர்கள் தான் இன்று ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றார்கள் அவர்களை நாங்கள் தெளிவுபடுத்த வேண்டும் இன்று விவசாயிகள் ஏமாற்றப்பட்டு கொண்டு வருகின்றனர். விவசாயிகள் சேதனப் பசளை உற்பத்திசெய்வார்களாக இருந்தால் அரசாங்கம் அவர்களுக்கு மானியமாக பணம் வழங்குவதற்கு தயாராக இருக்கின்றது அதற்கு அவர்கள் முன்வருவார்கள் என நம்புகின்றேன் என்றார்.



# மக்களின் பிரதிநிதிகள் ஒற்றுமையுடன் செயற்பட்டு சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும்

## மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் துரைநாயகம் கோரிக்கை



சிறுபான்மை மக்களின் கருத்துக்களுக்கு அரசு செவிசாய்க்கும் சூழல் உருவாகி வருகிறது, இதனை மக்களின் பிரதிநிதிகள் ஒற்றுமையுடன் செயற்பட்டு சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் சி.துரைநாயகம் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசானது இன்றைய நிலையில் பொருளாதார ரீதியாகவும், ஏனைய பல விடயங்கள் ரீதியாகவும் மிகுந்த நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. பெரும்பான்மை மக்களினுடைய ஒத்துழைப்பு மாத்திரம் போதும் என்ற விறுமாப்புடன் இருந்த அரசு பெரும்பான்மை மக்களிடையேயும் தனது செல்வாக்கை இழந்து வரும் நிலையில் சிறுபான்மை மக்களினுடைய ஒத்துழைப்புக்களையும் பெற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றது.

கொரோனாத் தாக்கத்தில் இருந்து இன்னும் மீளாத மக்களின்மீது தொடர்ந்து சுமத்தப்பட்டு வருகின்ற விலையேற்றங்களினால் அனைத்து மக்களும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அசேதன பசளையின் திடீர் நிறுத்தம், கடல் வளத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பு போன்றன விவசாயிகளையும், மீனவர் சமூகத்தையும் மாத்திரமன்றி ஒட்டுமொத்த மக்களையும் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. இதனால் அனைத்து மக்களும் வீதிக்கு இறங்கியுள்ளனர்.

குறிப்பாக ஆட்சிப் பீடத்தை தீர்மானிக்கின்ற சக்தியாக விளங்குகின்ற மகா சங்கத்தினருடைய அதிருப்தியையும் அரசு தனது செயற்பாடுகளினால் சம்பாதித்து வருகின்றது. இன்றைய நிலையில் அனைத்து மக்களும்சேர்ந்து எமதுநாட்டையும், அரசாங்கத்தையும் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு இருக்கின்றது. இந்த நிலைக்கு அரசும் தள்ளப்பட்டுள்ளது. இதனால் சிறுபான்மை மக்களுடைய கருத்துக்களுக்கு செவிசாய்க்கும் காலம் வெகு தொலைவில் இல்லை. எனவே இந்த வாய்ப்பை சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகள் ஒற்றுமையுடன் செயற்பட்டு சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.



# கந்தளாய் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இரண்டாம் கட்டத் தடுப்பூசிகள் ஏற்றும் பணி ஆரம்பம்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிராந்திய சுகாதார வைத்திய அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள் நேற்று ஆரம்பமாகியன.

கந்தளாய் பிராந்திய சுகாதார வைத்திய அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இன்று இரண்டாம் கட்ட கொவிட் தடுப்பூசிகள் 520 பேருக்கு செலுத்தப்பட்டன.

சினோபோர்ம் வகையைச் சேர்ந்த தடுப்பூசிகள் நேற்றைய தினம் கந்தளாய் பிராந்திய சுகாதார அத்தியட்சகர் அலுவலகத்தில் ஏற்றப்பட்டன. இதன் போது அறுபது வயதிற்கு மேற்பட்டோர் மற்றும் தாதிமார்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு தடுப்பூசிகளை ஏற்றினர்.

### வாழைச்சேனையில்

# ஆசிரியர்களுக்கு தடுப்பூசி வழங்கல்

வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி ரி.எஸ்.சஞ்ஜீவ் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவிலுள்ள பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கு வாழைச்சேனை இந்துக்கல்லூரி தேசிய பாடசாலையில் கொவிட் 19 தடுப்பூசிகள் இன்று ஏற்றப்பட்டன.

கொவிட் 19 தடுப்பூசி ஏற்றும் நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் வாழைச்சேனை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



விம்பிள்டன் ஓபின் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவு

# இறுதிப்போட்டியில் நாளை பிளிஸ்கோவா– அஷ்லெ பார்ட்டி





விம்பிள்டன் ஓபின் டென்னிஸ் தொடரின் பெண்களுக்கான அரையிறுதிப் போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ள நிலையில் செக்.குடியரசின் கரோலினா பிளிஸ்கோவாவும் ஆஸ்திரேலியாவின் அஷ்லெ பார்ட்டியும் இறுதிப்போட்டிக்குத் தேர்வாகியுள்ளனர்.

பெண்களுக்கான ஒற்றையர் பிரிவின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் கரோலினா பிளிஸ்கோவா, பெலராஸின் ஆர்யனா சபலென்காவுடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியின் முதல் செட்டை, சபலென்கா கடுமையாகப் போராடி 7–5 என்ற செட் கணக்கில் கைப்பற்றினார். இதனைத் தொடர்ந்து பதிலடி கொடுக்கும் முனைப்பில் விளையாடிய பிளிஸ்கோவா, இரண்டாவது செட்டை 6–4 என கைப்பற்றினார். இருவரும் தலா ஒரு செட்டைக் கைப்பற்றியமையால் வெற்றியை தீர்மானிக்கும் மூன்றாவது செட் விறுவிறுப்படைந்தது. அதிலும் அதே ஆக்ரோஷத்தைத் தொடர்ந்த கரோலினா பிளிஸ் கோவா, மூன்றாவது செட்டையும் 6–4 என கைப்பற்றி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார்.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில், உலகின் முதல்நிலை வீராங்கனையான ஆஸ்திரேலியாவின் அஷ்லெ பார்ட்டி, ஜேர்மனியின் ஏஞ்சலிக் கெர்பரை எதிர் கொண்டார்.

இப்போட்டியின் முதல் செட்டை அஷ்லெ பார்ட்டி, 6–3 என கைப்பற்றி முன்னிலை பெற்றார். இரண்டாவது செட் பறிபோனால் வெற்றி கைநழுவி போகுமென அறிந்த கெர்பர், அஷ்லெ பார்ட்டிக்கு கடும் நெருக்கடி கொடுத்தார். இதனால், இரண்டாவது செட்டை பிரேக்கர் வரை நீண்டது. எனினும் இந்த செட்டிலும் விட்டுக்கொடுக்காத அஷ்லெ பார்ட்டி, இறுதியில் 7–6 என அதனையும் கைப்பற்றி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

நாளை நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில், பிளிஸ் கோவாவும் அஷ்லெ பார்ட்டியும் மோதவுள்ளனர்.

பாகிஸ்தானை 9 விக்கெட்டுக்களால் வென்றது

# இங்கிலாந்தின் இளம் வீரர்கள் அணி



பாகிஸ்தான் அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டியில், இங்கிலாந்து அணி 9 விக்கெட்டுக்களால் அபாரமான வெற்றியைப் பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து அணி 1–0 என்ற கணக்கில் முன்னிலையைப் பெற்றுள்ளது.

கார்டிப் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட பாகிஸ்தான் அணி, 35.2 ஓவர்கள் நிறைவில் 141 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பஃகர் சமான் 47 ஓட்டங்களையும் சதாப் கான் 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். இங்கிலாந்து அணியின் சகிப் மொஹ்முட் 4 விக்கெட்டுகளையும் மத்தியூ பார்க்கின்ஸன் மற்றும் கிரெய்க் ஓவர்டொன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதனைத்தொடர்ந்து 142 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து அணி, 21.5 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து வெற்றி இலக்கையடைந்தது. டேவிட் மலன், ஸக் க்ரௌலி இருவரும் ஆட்ட மிழக்காது முறையே 68, 58 ஓட்டங்களை எடுத்தனர். பாகிஸ்தான்அணியின் ஷாயின் ஷா அப்ரிடி வீழ்த்தப்பட்ட ஒரே விக்கெட்டினைக் கைப்பற்றியிருந்தார்.

இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணியின் சகிப் மொஹ்முட் தெரிவுசெய்யப்பட்டார்.

ஐந்து அறிமுக வீரர்களுடன் களமிறங்கிய பென் ஸ்டோக்ஸ் தலைமையிலான இங்கிலாந்தின் இளம் அணிக்கு இந்த வெற்றி மிகுந்த உற்சாகத்தை அளித்திருக்கிறது. இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி, நாளை லண்டன்– லோட்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளருக்கு கொரோனாத் தொற்று



இலங்கை கிரிக்கெட் அணியின் துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளரான கிராண்ட் பிளவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணியுடன் இடம்பெற்ற போட்டித் தொடரை முடித்துவிட்டு இலங்கை அணி வீரர்களுடன் திரும்பியபோது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போதே தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது. இங்கிலாந்து அணிக் குழாமில் சிலருக்குக் கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, தொடரில் பங்கேற்ற இலங்கை அணியினருக்கும் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்திருந்தது.

வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்திய அணிக்கெதிரான தொடரில் விளையாடுவதற்காகத் தனிமைப்படுத்தலில் உள்ள அனைவரும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும், கிராண்ட் பிளவர் மருத்துவக் கண்காணிப்பின் கீழ் சிகிச்சை பெறுகிறார் எனவும் இலங்கைக் கிரிக்கெட் சபைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இங்கிலாந்துடனான தொடரில் விளையாடிய ஒருநாள், ரி–20 தொடர்களில் இலங்கை அணி தோல்வியடைந்திருந்ததோடு, அணியின் மூன்று வீரர்கள் கொரோனா விதிமுறைகளை மீறியமைக்காக ஒழுக்காற்று விசாரணைகளை எதிர்நோக்கியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஒலிம்பிக் போட்டிகளை நேரில் பார்க்க உள்நாட்டு ரசிகர்களுக்கும் அனுமதியில்லை



ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் வருகிற 23 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 8 வரை ஒலிம்பிக் போட்டித் தொடர் நடைபெறவுள்ளது. இதற்கிடையே டோக்கியோவில் கொரோனாப் பாதிப்பு அதிகரித்து வருவதால் பிரதமர் யோஷிஹிடே சுகா நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்துள்ளார்.

இது அடுத்த மாதம் 22 ஆம் திகதி வரை நீடிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பிப்பதற்கு 2 வாரங்களுக்கும் குறைவாகவே அவகாசம் உள்ள நிலையில் அங்கு நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டிருப்பது அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. அவசர நிலைக் கட்டுப்பாடுகளுக்குட்பட்டே ஒலிம்பிக் போட்டிகளும் நடைபெற்றாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

அவசரநிலைப் பிரகடனத்தின் எதிரொலியாக ஒலிம்பிக் போட்டிகளை நேரில் பார்ப்பதற்கு ரசிகர்களுக்கு அனுமதி வழங்கப்படாது என்று ஜப்பான் ஒலிம்பிக் குழுவுக்குப் பொறுப்பான அமைச்சர் தமயோ மருகவா அறிவித்துள்ளார். முதலில் வெளிநாட்டு ரசிகர்களுக்கு மட்டும் தடை விதிக்கப்பட்டு, உள்நாட்டு ரசிகர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. உள்நாட்டு ரசிகர்கள் பத்தாயிரம் பேர் வரை கொரோனாத் தடுப்பு விதிகளைப் பின்பற்றி அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இப்போது, இந்த ஒலிம்பிக் திருவிழா ரசிகர்கள் இன்றி வித்தியாசமான அனுபவத்தைச் சந்திக்கப்போகிறது.

வெளிநாட்டுப் பார்வையாளர்களின் வருகை இல்லையென்றான பின்பு, உள்நாட்டு ரசிகர்கள் வாங்கும் டிக்கெட்டுக்கள் மூலமாகவாவது ஓரளவு வருமானம் கிடைக்கும் என்று போட்டி அமைப்பாளர்கள் மதிப்பிட்டிருந்த நிலையில், இனி டிக்கெட் விற்பனை மூலமான வருமானம் கிடையாது என்பதால், ஒலிம்பிக் குழு பெருத்த நட்டத்தை எதிர்நோக்கியுள்ளது.

அவசர நிலைப் பிரகடனம் காரணமாக பாதுகாப்பு ஏற்பாடுகளிலும் மேலும் பணத்தை இறைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக ஒலிம்பிக் குழுவை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

# காணிகள் விடுவிக்கப்படுவதன் மூலமாக சுபீட்சத்தின் நோக்கு விரைவுபடுத்தப்படும்

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை

வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக் களங்களால் கட்டுப்படுத்தப்பட்டுள்ள விவசாய நிலங் கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு கிழக்கு பிரதேசத்தில் நீர் வேளாண்மை பண் ணைகளை அமைப்பதற்குத் தேவையான காணிகள் தொடர்பாகவும் பிரஸ்தாபித்துள்ளார்.

வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச் சர் சி.பி. ரத்நாயக்காவுடனான சந்திப்பின் போதே கடற்றொழில் அமைச்சரால் இந்த விடயங்கள் பிரஸ் தாபிக்கப்பட்டுள்ளன.

வனஜீவராசிகள் அமைச்சில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சந்திப்பின்போது, வடக்கு மாகாணத்தில் தற்போது வனத்துறையினரினால் கட்டுப்படுத்தப்பட் டுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளில், யுத்தத் துக்கு முற்பட்ட காலப் பகுதியில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார் அமைச்சர் சி.பி. ரத்நாயக்க விற்கு தெளிவுபடுத்தினார்.

அத்துடன், குறித்த காணிகளில் விவசாய நடவடிக் கைகளை மேற்கொள்வதற்கு வடக்கு விவசாயிகள் ஆர் வமாக இருக்கின்றமையையும் சுட்டிக்காட்டிய அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா, சம்பந்தப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்பட்டு விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் படும் பட்சத்தில், அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தை விரைவுபடுத்த முடியும் எனவும் தெரிவித்தார்.




அதேபோன்று, வடக்கு கிழக்கு பிரதேசத்தில் ஏற்றுமதித் தரத்திலான நண்டு, இறால், மீன் வளர்ப்பு பண்ணைகளை உருவாக்கி நீர் வேளாண் மையை விருத்தி செய்வதன் மூலம் மேலதிக வருமானத்தை மக்களுக்கு பெற்றுக் கொடுப்ப துடன் அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள் வதற்கும் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகின்ற நிலையில், வனப் பாதுகாப்பு மற்றும் வனஜீவராசி கள் திணைக்களத்தால் கட்டுப்படுத்தப்பட்டுள்ள காணிகளில் நீர் வேளாண்மை பண்ணைகளை அமைப்பதற்குப் பொருத்தமான இடங்களை விடுவித்து பயன்படுத்திக் கொள்வது தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது கடற்றொழில் அமைச் சரால் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சரின் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட அமைச்சர் சி.பி. ரத்நாயக்க, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சிகளுக்கு பூரணமான ஒத்துழைப்பை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மறைமாவட்டத்திற்கு புதிய குருமுதல்வர் நியமனம்



மன்னார் மறைமாவட்டத்தின் புதிய குருமுதல்வராக அருட்பணி பி.கிறிஸ்து நாயகம் அடிகளார் நிய மிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மறைமாவட்டத்தில் பல ஆண்டுகாலமாக அர்ப்பணிப்போடு குறிப்பாக யுத்தக் காலங்களிலும், மக்கள் இடம்பெயர்ந்திருந்த காலங் களிலும் முன்னையநாள் ஆயர் அமரர் இராயப்பு யோசெப்பு ஆண்ட கையுடன் இணைந்து பணியாற்றிய அருட்பணி அ. விக்டர் சோசை அடி களார் பல ஆண்டு காலமாக மன் னார் மறைமாவட்டத்தின் குருமுதல் வராக பணியாற்றி வந்தார்.

தற்போது இடம்பெற்றுள்ள அருட் பணியாளர்களுக்கான மாற்றத் திற்கு அமைய, புதிய குருமுதல்வ ராக அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார், மன்னார் மறைமாவட்ட ஆயர் ஆண்டகையின் ஊடாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# இலங்கையில் மீண்டும் பயங்கரவாதத் தாக்குதல்; அமெரிக்காவின் எச்சரிக்கைக்கு அரசு விளக்கம்

உளவுத்துறை அறிக்கைகளின் அடிப்படை யில், நாட்டில் பயங்கரவாத அச்சுறுத்தல் எது வும் இல்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாட்டில் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் நிலவுவது தொடர்பாக உளவுத்துறை அறிக் கைகளின் அடிப்படையில் எந்தத் தகவலும் வரவில்லை எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்தார்.

பயங்கரவாத அச்சுறுத்தல் தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள இலங்கை குறித்து புதுப்பிக்கப் பட்ட பயண ஆலோசனைக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா நிலைமை காரணமாக இலங்கை தொடர்பான அமெரிக்க பயண ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றும் பயங்கரவாதத்துக்கு எதிரான அச்சுறுத்தலும் அதில் இயல்பாகவே சேர்க்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சுற்றுலா இடங்கள், போக்குவரத்து மையங்கள், சந்தைகள், வணிக வளாகங்கள், ஹோட்டல்கள், கிளப்கள், உணவகங்கள், வழிபாட்டுத் தலங்கள், பூங்காக்கள், முக்கிய விளையாட்டு மற்றும் கலாசார நிகழ்வுகளை குறிவைத்து இலங்கையில் பயங்கரவாதிகள் தாக்கக்கூடும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விவசாயத் திணைக்களத்தின் இரு அதிகாரிகள் கைதாகினர்

விவசாயத்திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளரும், ஆலோசகர் ஒருவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு இந்தோனேஷியாவிலிருந்து இறக்கு மதி செய்யப்பட்ட ஒரு தொகை உலர்ந்த பாக்குகளுக்கு போலி தனிமைப்படுத்தல் சான்றிதழ்களை வழங்கிய குற்றச்சாட்டுக்காகவே இவர்கள் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

இலங்கை சுங்கப் பிரிவினர் குற்றப் புலனாய்வுப் பிரிவில் அளித்த முறைப்பாட்டுக்கு அமைவாகவே இந்த கைது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக சி.ஐ.டியினர் பல அறிக்கைகளை பதிவுசெய்துள்ளனர். இந்த சம்பவத் துடன் வேறு யாராவது தொடர்பு கொண்டுள்ளனரா என்பது தொடர்பாக மேலதிக விசாரணைகள் சி.ஐ.டி யினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# சாகர காரியவசத்துக்கு புதிய பதவி வழங்கல்

ஆளும் கட்சியின் துணை கொறடா பதவிக்கு நியமிக்கப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினரு மான சட்டத்தரணி சாகர காரியவசம் அதற்கான நிய மனக் கடிதத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்து நேற்று (வியாழக்கிழமை) நாடாளுமன்றத்தில் வைத்து பெற்றுக் கொண்டார்.

நாடாளுமன்றத்திலுள்ள பிரதமர் அலுவலகத்தில் வைத்து இந்த நியமனக் கடிதம் வழங்கிவைக்கப்பட்டது.

இதற்கு முன்னதாக ஆளும் கட்சியின் துணை கொறடாவாக பதவி வகித்த ஜயந்த கொட்டகொட தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தமையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் வகையில் சட்டத்தரணி சாகர காரியவசம் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தர்ப்பத்தில் ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பிரதமரின் மேலதிக செயலாளரும், ஆளும் கட்சியின் பிரதம கொறடாவின் செயலாளருமான சட்டத்தரணி சமிந்த குலரத்ன உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

# ஜோன் கொத்தலாவலை பல்கலைக்கழக சட்டமூலம் ஒட்டுமொத்த உயர்கல்விக்கும் பாரிய அச்சுறுத்தல்

## ஹரினி அமரசூரிய எச்சரிக்கை

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் சட்டமூலம் ஒட்டு மொத்த பல்கலைக்கழகங்களுக்கும் பாரிய அச்சுறுத்தலா கும். இராணுவக் கலாசாரத்துக்கும் உயர்கல்விக்கும் வித்தியாசம் இருக்கின்றது. அதனால் உயர்கல்வியில் இராணுவக்கலாசாரத்தை புகுத்துவது மிகவும் ஆபத்தாகும் என தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்பு பல்கலைக் கழகம் தொடர்பான சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் சட்டமூலம் நாட்டில் இருக்கும் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். ஏனெனில் இந்த சட்டமூலம் தொடர்பில் எமக்கு எழுந்த சந்தேகம் தொடர்பில் பாது காப்பு அமைச்சின் நாடாளுமன்ற செயற்குழுவுக்கு எமது பரிந்துரைகள் சிலவற்றை தெரிவித்தபோது அதற்கு எமக்கு கிடைத்த பதிலில், அந்த சந்தேகங்கள் உறுதி யாகின.

விசேடமாக இந்தப் பல்கலைக்கழகத்துக்கு நிதி அறவிடுவது, இந்த பல்கலைக்கழகம் திறைசேரிக்கு பாரமாக இருக்கக்கூடாது என்பதற்காக எனவும், அந்நிய செலாவணியை பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அப்படியானால் இவர்கள் உயர் கல்வியை நாட்டின் ஏனைய தென்னை. இறப்பர் துறைகளுக்கு சமப்படுத் தியே இருக்கின்றனர். ஏனைய துறைகளை விற்பனை செய்து சம்பாதிக்கலாம். ஆனால் கல்வியை அவ்வாறு செய்ய முடியாது.

கல்வியை விற்று சம்பாதிக்கும் நிலைக்குச் செல்லக் கூடாது. அதேபோன்று இராணுவ நிர்வாகம் அங்கு இடம்பெறுகின்றதை உணர்ந்துகொள்ள முடிகின்றது.



கொத்தலாவலை பல்கலைக்கழகத்தின் தீர்மானம் எடுக்கும் 9 பேர் கொண்ட குழுவில் 5 பேர் கோரமாகும் அதில் இரண்டுபேர் இராணுவ கொமாண்டர்களும் பல் கலைக்கழக பீடாதிபதியும் இருக்கவேண்டும் என்றே தெரிவிக்கப்பட்டுள்ளது. இராணுவம் தொடர்பான தீர்மா னங்களை இராணுவத்தினர் மேற்கொள்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் கல்விக்கூடத்துக்குள் இராணுவத்தினரை தலையிடச்செய்வது எந்தளவு பாரதூமானது என்பது கல்வி அமைச்சருக்கு நன்றாகவே தெரியும். ஆனால் அவர் இவை எதனையும் தெரியாமலே இங்கு கதைத்தார்.

மேலும் இராணுவக்கலாசாரத்துக்கும் உயர்கல்விக்கும் பாரிய வித்தியாசம் இருக்கின்றது. இராணுவக் கல்வி நிலையங்களில் மாணவர்களுக்கு திருமணம் முடிக்க முடியாது. கூட்டங்களை நடத்த முடியாது போன்ற பல விடயங்கள் இருக்கின்றன. ஆனால் எமது சாதாரண பல்கலைக்கழகங்களில் அவ்வாறு இல்லை. மாணவர் களுக்கு பிரச்சினைகளை வெளிக்கொண்டுவர உரிமை இருக்கவேண்டும்.

கொத்தலாவலை பல்கலைக்கழகமாகுமெனில் பல்கலைக்கழகமொன்றின் நோக்கத்தை எவ்வாறு இதில் எதிர்பார்க்க முடியும். இராணுவப் பயிற்சி அது தொடர் பான கல்வி பயிலும் இடமாக இது இருந்தால் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் இது அவ்வாறு அல்ல. சாதாரண மாணவர்களும் படிக்கும் பல்கலைக் கழகம். இதில் இராணுவக் கலாசாரத்தை ஏற்படுத்துவது எமது பாரிய பாதிப்பாகும் என்பதை அனைவரும் உண்ர்ந்து செயற்படவேண்டும். – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt.Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.07.2021 இல் வெளியிடப்பெற்றது.